# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.**DEGREE EXAMINATION –**TAMIL LITERATURE**

SIXTH SEMESTER – **APRIL 2019**

**16UTL6MS01/TL 6603– SPECIAL LITERATURE - THIRUKKURAL**

Date: 11-04-2019 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி - அ** (10 x 2 = 20 மதிப்பெண்கள்)

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. திருவள்ளுவ மாலை - குறிப்பு வரைக.
02. தமிழில் தோன்றிய அற இலக்கியங்களில் எவையேனும் நான்கினைக் குறிக்க.
03. பாயிரவியலில் இடம்பெறும் அதிகாரங்கள் யாவை?
04. பழைய உரையாசிரியர்களில் எவரேனும் இருவர் பெயரைக் குறிக்க.
05. வானம் வழங்காது எனின் எவை இரண்டும் உலகின் கண் தங்காது?
06. விளித்தாரின் வேறல்லர் யார்?
07. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் எதைப் போன்றது?
08. இணரூழ்த்தும் நாறா மலரனையர் யார்?
09. மடவரல் நோக்கமும் மூன்றுமுடைத்து - அவை யாவை?
10. உப்பமைந்தற்றால் புலவி - இதன் பொருள் யாது?

**பகுதி - ஆ** (5 x 7 = 35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.**

11. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்து விளக்குக.
12. பரிமேலழகரின் திருக்குறள் உரைச்சிறப்பினைப் புலப்படுத்துக.
13. மழையின் சிறப்பை ‘வான்சிறப்பு’ அதிகாரம் கொண்டு நிறுவுக.
14. செங்கோன்மை அதிகாரத்தின் வழி வள்ளுவர் உணர்த்த விரும்பும் அரசியல் அறங்களைத் தொகுக்க.
15. கல்வியின் பெருமைகளை வள்ளுவர் வழி விளக்குக.
16. நாடு எப்படி விளங்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்?
17. ‘நலம் புனைந்துரைத்தல்’ அதிகாரக் கருத்துகளைத் தொகுக்க.

**பகுதி - இ** (3 x 15 = 45 மதிப்பெண்கள்)

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. திருக்குறள் ஓர் உலகப் பொதுமறை என்று போற்றுவதற்குரியக் காரணங்களைத் தொகுக்க.

**( அல்லது )**

வாழ்க்கை துணைநலத்தின் மேன்மையையும், மக்கட்பேற்றின் மாண்பினையும் குறள் வழி விவரிக்க.

19. ஆக்கமும் கேடும் குறித்து ஊக்கமுடைமை, மடியின்மை அதிகாரங்கள் உணர்த்தும் கருத்துகளைத் தொகுக்க.

**( அல்லது )**

வலியறிதல் மற்றும் காலமறிதலின் இன்றியமையாமையை வள்ளுவர் எங்ஙனம் உணர்த்துகிறார்?

20. பிறனில் விழையாமை, வரைவின் மகளிர் அதிகாரங்களின் வழி வள்ளுவர் உணர்த்தும் ஒழுக்கநெறிமுறைகளைத் தொகுக்க.

**( அல்லது )**

புலவி, புலவி நுணுக்கம் குறித்த செய்திகளைக் கட்டுரைக்க.

---